**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 39/2020 DW2**

03.09.2025 **பி.வா.சா.2 சுரேஷ் சத்திய வாக்குமூலத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் பி.எஸ்.சி. படித்துள்ளேன். நான் தற்போது திருவண்ணாமலை அரோமேட்டிக் ரூட் குயின் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். வாதி வழக்கு சொத்தை இரண்டு சமபங்காக பிரித்து ஒரு பங்கை அவருக்கு ஒதுக்கும்படி கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ராமசாமி ரெட்டியாருக்கு பொன்னுசாமி, முத்துசாமி என்ற இரண்டு மகன்கள் என்று சொன்னால் சரிதான். பொன்னுசாமிக்கு ராஜம்மாள் என்ற மனைவி உள்ளார் என்றால் சரிதான். பொன்னுசாமி - ராஜம்மாள் தம்பதிக்கு எனது அம்மா விஜயா, முருகேசன், சுப்பிரமணி, 1ம் பிரதிவாதி வெங்கடேசன் ஆகியோர் பிள்ளைகள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ன் முன்னிலைக்கு 22.06.2000ந் தேதி காலம் சென்ற ராமசாமி மகன் பொன்னுசாமி, பொன்னுசாமியின் மக்களான முருகேசன், சுப்பிரமணியம், வெங்கடேஷ் ஆகியோர் வழக்கு சொத்து உள்ளிட்ட சில சொத்துக்களை பாகப்பிரிவினை மூலம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1ல் பிருதுராஜித வகையில் நமது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாகப் பிரிவினை ஆவணம் முன்னிலைக்கு 1ம் பிரதிவாதியான வெங்கடேசனுக்கு கிடைத்த பூர்வீக சொத்துக்களை பொருத்து தவறான அடிப்படையில் வா.சா.ஆ.2 மூலம் 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்கண்டவாறு 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்தது பற்றி எனக்கு தெரியாது என நான் கூறியுள்ளதால், எனது நிருபண வாக்குமூலத்தில் மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் டி அயிட்ட சொத்து முதல் பிரதிவாதி வெங்கடேசன் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது, மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் முதல் பிரதிவாதிக்கு வந்த சொத்து அவரின் தனிப்பட்ட சொத்து, அதனை 1ம் பிரதிவாதி 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்து விட்டு திருப்பூர் சென்று விட்டார் என்றும், கிரையம் செய்து கொடுத்த பத்திரத்தில் 1ம் பிரதிவாதி அவரது மைனர் மகளான வாதியை பராமரிப்பதற்கும், இதர கடன்களை பைசல் செய்வதற்கும் மேற்படி தாவா சொத்தை கிரையம் கொடுத்ததாக சொல்லியுள்ள விவரம் தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் முன்னிலைக்கு 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை 2, 3 பிரதிவாதிகளுக்கு உரிமையோ, அருகதையோ இல்லாதவர் என்றால் அது பற்றி எனக்கு

தெரியவில்லை. வா.சா.ஆ.2ல் கண்டுள்ள சொத்தில் வாதிக்கு சமபங்கு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.3 கிரையப் பத்திரம் முன்னிலைக்கு 11.08.2005ந் தேதி ராஜாம்பாள் மற்றும் அவரின் மகன்கள் சுப்பிரமணி, வெங்கடேசன் ஆகியோர் தாவா பி அயிட்ட சொத்து உள்ளிட்ட சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் கண்டுள்ள சொத்து 1ம் பிரதிவாதிக்கு அவரது பூர்வீக சொத்தின் வருவாய் மூலம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 முன்னிலைக்கு ராஜாம்பாள் மற்றும் அவரின் மகன்கள் சுப்பிரமணி, வெங்கடேசன் ஆகியோர் திருவண்ணாமலை தாலுக்கா, சு.வாளவெட்டி கிராம சர்வே எண் 90/3ல் ஏக்கர் 2.85 கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வெங்கடேசன் எனது தாய் மாமன் ஆவர். வாதி, எனது தாய்மாமன் 1ம் பிரதிவாதி வெங்கடேசனின் மகளாவார். 1ம் பிரதிவாதி வெங்கடேசன் மதம் மறுப்பு திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மதம் மறுப்பு திருமணம் செய்து கொண்டதால் அவரது குடும்பத்தார் அவருடன் அனுசரணையாக இல்லை என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் பத்தி 5ல் 1ம் பிரதிவாதி திருப்பூரில் வேலை செய்து கொண்டு இருந்த போது காலில் அடிப்பட்டு இருந்த போது வாதியும், அவரது தாயாரும் அவரை கவணிக்கவோ, மருத்துவ செலவுகளையோ பார்க்கவில்லை என்று சொல்லியுள்ள விவரத்தை எனது எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு தற்போது சொல்லியுள்ளேனா என்றால் நியாபகம் இல்லை. நான் எனது நிருபண வாக்குமூலத்தில் தவறாக சொல்லியுள்ளேன் என்றும், 1ம் பிரதிவாதியை வாதியும், அவரது தாயாரும் முறையாக செலவு செய்து பராமரித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. (வழக்குறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.